# பொருளியலிற் பொதுக்கொள்கையின் முக்கியத்துவம்

**ந. பேரின்பநாதன்**
பொருளியற்றுறை
இலங்கைப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாண வளாகம்

பொருளியலை முறையாகப்பயில முனையும் எந்த ஒரு மாணவனும் ஆரம்பத்திலேயே 'யோன் மேனாட் கெயின்ஸ்' (John Maynard Keynes) என்ற பெயரினை அறிந்து கொள்கிறான். இவ்வாறு யோன் மெனாட் கெயின்ஸ் என்ற பெயர் பொருளியலில் முக்கியத்துவம் பெறக் காரணமாக அமைந்தது அவர் எழுதிய ''வேலை வாய்ப்பு வட்டி, பணம் என்பன பற்றிய பொதுக் கொள்கை'' (The General Theory of Employment, Interest and Money) என்ற நூலேயாகும், இந்நூல் 1936இல் வெளியிடப்பட்டவுடனே பொருளியலில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்திவிட்டதென்று கூறினாலும் மிகையாகாது. இந்நூல் நீண்ட பெயரைக்கொண்டதாக இருப்பினும் ''பொதுக் கொள்கை'' (General Theory) என்று சுருக்கமாக அழைக்கப்பட்டு வருவது மரபாகி விட்டது. ''எனது தர்க்கரீதியான நியாயங்களையும் முடிபுகளையும் பழம் பொருளியலாளரின் கொள்கையோடு ஒப்பிட்டு நோக்கி வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே 'பொது' என்ற சொல்லை அழுத்திக் கூறினேன்'' என கெயின்ஸ் நூலின் ஆரம்பத்திலேயே தெரிவிக்கிறார். றிக்காடோ, யேம்ஸ் மில் ஆகியவர்களை மட்டுமல்லாது, ஜே. எஸ். மில், மாஷல் எட்ஜ்வர்த், பிகு போன்றோரையும் கெயின்ஸ் பழம் பொருளியலாளர் என்ற வரிசைக்குள் அடக்குகிறார். நூலிற் காணப்படும் கருத்துக்களும் ''பொதுக் கொள்கை'' என்ற பெயரினை வலியுறுத்துவனவாக உள்ளன. பழம்பொருளியலாளரது கருத்துக்கள் பல நிறை தொழில் மட்ட நிலைமைக்கு மட்டுமே பொருந்துவன. ஆனால் கெயின்சின் கருத்துக்கள் நாட்டில் நிறைதொழில் மட்டம் நிலவினாலும் நிலவாவிட்டாலும், இரண்டு நிலைமைகளுக்கும் பொருந்தக்கூடியனவாக உள்ளன. பழம்பொருளியலாளர்களது கருத்துக்களில் பணச்சார்பான கருத்துக்களும், மெய்சார்பான கருத்துக்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டுத் தொடர்பற்றுக் காணப்பட்டன. ஆனால் அவ்விருவகையான கருத்துக்களையும் இணைத்து அவற்றில் இருந்து பொதுவான முடிபுகளைக் கூறியதனாலும் அந்நூலுக்குப் ''பொதுக் கொள்கை'' என்ற பெயர் இருப்பது பொருத்தமானதாகும். பொதுக் கொள்கையில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் கெயின்சுக்கே சொந்தமானவையுமல்ல. அந்நூலிற் காணப்படும் பல கருத்துக்கள் கெயின்சுக்கு முன்பே பலரால் கூறப்பட்டிருந்தன. உதாரணமாக பொதுக் கொள்கையின் அடிப்படைக் கருத்தான ''பயன்படு கேள்வி'' (Effective Demand) என்பது முதலில் தோமஸ் ரொபர்ட் மல்தூஸ் (Thomas Robert Malthus) என்ப

வரால் கூறப்பட்டிருந்தது. அவரது ''பொருள் தேக்கம்'' ''தேவைக் குறைவு'' என்ற கருத்துக்களே, 'பயன்படு தேவை' என்ற விடயம் ஏற்படக் காரணமாக இருந்தன. ஆனால் மல்தூஸ் இது பற்றித் தெளிவான விளக்கத்தினை அளித்திருக்க வில்லை. 'முதலின் எல்லை விளைதிறன்' (Marginal Efficiency of Capital) என்ற விடயம் இர்விங் பிஷர் (Irving Fisher) என்ற அமெரிக்கப் பொருளியலாளரிட மிருந்து பெறப்பட்டது. இவை போன்று பொதுக் கொள்கையிற் காணப்படும் வேறு சில கருத்துக்களும் கெயின்சினால் பிறரிடமிருந்து இரவலாகப் பெறப்பட்ட போதும், பலவழிகளிலும் பல்வேறிடங்களிலும் சிதறிக்கிடந்த கருத்துக்களையும், தனது சொந்தக் கருத்துக்களையும் சேர்த்து ஒழுங்கான முறையில் ஒரு பொதுப் பட்டநூலாக்கிய பெருமை கெயின்சினையே சாரும். பொதுக்கொள்கை வெளிவந்த பின் பொருளாதார சம்பந்தமாக எழுகின்ற கருத்துக்களில் சில :

(1) கெயின்சுக்கு முற்பட்டோர் கருத்துக்களோடு சார்பானவை.

(2) கெயின்சின் கருத்துக்களோடு சார்பானவை.

(3) கெயின்சுக்குப் பிற்பட்டோர் கருத்துக்களோடு சார்பானவை

எனப் பிரித்து நோக்குவது வழக்கமாகிவிட்டது. எந்த ஒரு கருத்தினையும் மதிப்பிடுவதற்கு அல்லது எல்லைப்படுத்துவதற்கு உபயோகப்படுத்தும் பொது அளவையானது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அத்தகைய தொரு பொது அளவையாக பொதுக் கொள்கை விளங்குவதே மேற்குறிப்பிட்ட பிரிவுகள் எழு வதற்குக் காரணமாக அமைந்தது. இக்காரணத்தினாலும் அந்நூலுக்குப் பொதுக் கொள்கை என்ற பெயர் இருப்பது பொருத்தமே. இப் பொதுக்கொள்கையானது எவ்வாறான வகையில் பொருளியலில் முக்கியத்துவத்தினைப் பெற்றுக் கொள்கின் றது என்பதினைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புதிதாக எழுகின்ற எக் கருத்துக்களும், அவை எவ்வெத்துறைகளை (இயற்கை விஞ்ஞானத்துறையினை அல்லது சமூக விஞ்ஞானத்துறையினைச்) சார்ந் தனவாக இருப்பினும் இரு வழிகளில் முக்கியத்துவம் பெறலாம் :

(1.) பழங்காலத்திலிருந்தே மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் கருத்துக் கள் யதார்த்த ரீதியானவையல்ல என்றும், அவை எவ்வகையில் உண் மைக்குப் புறம்பானவை என்று மறுத்துக் கூறியும் தெளிவு படுத்துவது.

(2) புதியனவாக உண்மைக்குப் பொருத்தமுடைய விடயங்களைக் கூறுவது, அதாவது அறிவியல் உலகிற்கு புதிய ஆக்கங்களைக் கொடுப்பது.

மேற்கூறிய இருவழிகளாலும் கெயின்சின் பொதுக்கொள்கையானது முக் கியத்துவம் பெற்று விளங்குகிறது. பொதுக்கொள்கையின் முற்பகுதியில் பழம் பொருளியலாளரின் கருத்துக்களை மறுத்துக் கூறுவதன்மூலமாக முதலாவது வழி யினால் முக்கியத்துவம் பெறுவதுடன் அதுவே தனது நோக்கத்தின் ஒரு பகுதி என்பதையும் அந்நூலின் முதலாம் அத்தியாயத்திலேயே கெயின்ஸ் குறிப்பிட்டு விடு கிறார்:

''பழம் பொருளியலாளரின் எடுகோள்கள் ஒரு விசேட நிலைக்கே பொருந் துவனவேயன்றி எல்லா நிலைகளுக்கும் பொருந்துவனவல்ல. அது கற்பனை செய்யும் நிலை ........ பழம் பொருளியலாளர் கற்பனை செய்த நிலையின் தன்மைகள் நமது நடைமுறைப் பொருளாதார சமூகத்திற்குச் சொந்த மானதல்ல. எனவே அவர்களின் போதனையை எமது அனுபவபூர்வமான

விடயங்களுக்குப் பொருத்த முயன்றால் அது தவறான வழியைக் காட்டுவதுமல்லாமல் கெடுதியையும் விளைவிக்கும்.''

என்று கூறுவதன் மூலம் கெயின்சினது நோக்கத்தினை வெளிப்படுத்தி விடுவதற்கும் பழம் பொருளியலாளரின் உண்மைத்தன்மையற்ற கருத்துக்கள் சிலவற்றினை எள்ளி நகையாடல் செய்வதற்கும் மேற்குறிப்பிட்ட சொற்களைவிட வேறு சொற்கள் கிடைப்பது அருமை என்பதில் ஐயமில்லை. நூலின் பிற்பகுதியில் பொருளியல் உலகிற்குச் சில புதிய கருத்துக்களை வழங்குவதன் மூலமாக இரண்டாவது வழியிலும் பொதுக்கொள்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.

அறிவியற் கண்டுபிடிப்புக்களாயினும், சமூக விஞ்ஞானக் கருத்துக்களாயினும் இலக்கியக் கருத்துக்களெனினும், அத்தகைய கண்டுபிடிப்புக்களோடு அல்லது கருத்துக்களோடு அவற்றின் மூலகர்த்தாக்கள் வாழ்ந்த சமூக நிலைமைகளின் தாக்கங்கள் ஏதோ ஒரு வகையில் பெருமளவோ சிறிதளவோ தொடர்பு பட்டிருப்பது தவிர்க்க முடியாத ஒரு இயல்பாகும். பல நோய்களுக்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட சூழலை நோக்கின், அம்மருந்து கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அம்மருந்து உபயோகிக்கப்படும் நோயின் உபாதை சமூகத்தில் மிகக் கூடுதலாக இருந்திருப்பதை அறியலாம். உண்மையான ஒரு நாவலாசிரியரை எடுத்துக்கொண்டால் அவரது நாவல்களில் அவர் வாழ்ந்த சமுதாய நிலைமைகள் பிரதிபலிக்கப்படுவதைக் காணலாம். இத்தகைய தொடர்பினைப் பொறுத்தவரையில் கெயின்சின் பொதுக் கொள்கையும் விதிவிலக்கானதல்ல. கெயின்சின் பொதுக்கொள்கையானது பெரும்பாலும் நிறைவு வேலை மட்டத்தினை (Full Employment) எவ்வாறு அடைந்து கொள்வது என்பது பற்றியும் (நிறைவு வேலை மட்டம் என்பது பொருளாதாரத்தில் உள்ள உற்பத்திச் சாதனங்கள் யாவும் வேலையில் ஈடுபட்டிருக்கும் நிலையைக் குறிக்கும்) ஏற்ற இறக்கமற்ற நேரான பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைந்து கொள்வது என்பது பற்றியும் அவற்றில் சிக்கல் ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றை நீக்குவதற்குரிய வழிகளையுமே ஆராய்கிறது. இவையே நூலின் முக்கிய கருப் பொருள்களாய் அமைந்தமைக்குக் காரணம் 1930-ம் ஆண்டளவில் உலக நாடுகளிற் காணப்பட்ட பெருமந்தமேயாகும். அப்பெருமந்த காலத்தில் பெரும்பாலான நாடுகளைப் பாரிய வேலையின்மையும், வறுமைப் பிணியுமே பிடித்திருந்தன. பெருமளவிலான வேலையின்மை என்பது பொருளாதார வளர்ச்சியினை மட்டுமல்ல, சமூக நிலைமைகளிலும் பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். 1930-ம் ஆண்டு மந்த நிலையில் இருந்து எவ்வாறு மீளுவது என்று அரசியல் வாதிகளும், பொருளியல் அறிஞர்களும் தமது அறிவுப் புலன்களை அவ்விடயத்தினை நோக்கி திசை திருப்பிக்கொண்டிருந்தனர். பொருளியல் அறிஞர்களுக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும் அந்த மந்த நிலையினைக் கருதலாம். அத்தகைய நேரத்தில் கெயின்சினால் மந்த நிலையை நீக்குவதற்குரிய பரிகாரமான கருத்துக்களை உள்ளடக்கி வெளியிடப்பட்ட நூலாக பொதுக்கொள்கை அமைந்தது. பொருளாதாரம் முழுவதையும் ஒரே நேரத்தில் முழுமையாக நோக்குகின்ற பேரின (Macro) ரீதியில் அமைந்த கருத்துக்களை அடக்கியதாக இருப்பதுவும் பொதுக்கொள்கையின் சிறப்புக்களில் ஒன்றாகும். மொத்த வேலை மட்டம், மொத்த வருமானம், மொத்த உற்பத்தி, மொத்தச் சேமிப்பு, மொத்த முதலீடு, மொத்த நுகர்வு என்ற வகையில் பொருளாதார சம்பந்தமான விடயங்களை மொத்த (Aggregate) ரீதியில் நோக்குதலையே பேரின ரீதியான முறை என்பர். உதாரணமாக ஒரு யானையினை எடுத்துக்கொண்டால் ஒரே நேரத்தில் அதன் எல்லாப்பாகங்களையும் நோக்கு நிலையே பேரின ரீதியான நோக்கு என்று கூறலாம். கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆல் பேரின ரீதியானமுறை

பெருமளவுக்குக் கையாளப்பட்டபோதும் தெளிவான முறையில் முதன் முதல் பேரின ரீதியானநோக்கு இடம் பெற்றிருந்தது. பொதுக்கொள்கையிலேயாகும். அத்துடன் பொதுக்கொள்கை வெளிவந்த பின்னர்தான் பல பொருளியலாளராலும் பேரின ரீதியானமுறையில் பொருளாதாரத்தினை நோக்குதல் பின்பற்றப்பட்டது. இதற்குமுன்னர் சிற்றின (Micro) ரீதியான நோக்கே பொருளாதாரத்தில் பெரிதும் இடம் பெற்றிருந்தது. தனி நபரின் கேள்வி, தனி ஒரு நிறுவனத்தின் சமநிலை உற்பத்தி, தனி ஒரு நிறுவனத்தின் மூதலீடு, தனிப்பட்ட நுகர்வோனின் சமநிலை என்ற வகையில் பொருளாதாரத்தின் அங்கங்கள் ஒவ்வொரு பகுதி பகுதியாகவே சிற்றின ரீதியான நோக்கில் ஆராயப்பட்டன. இதற்குதாரணமாக ஒரு நேரத்தில் யானையின் கால்களையும், இன்னொரு நேரத்தில் யானையின் துதிக்கையினையும், பிறிதொரு நேரத்தில் யானையின் உடம்பினையும் பகுதி பகுதியாக தனித்தனியே ஆராய்வதைக் குறிப்பிடலாம். இதற்குக் காரணமாக அமைந்தன அக்காலச் சூழ்நிலைகளேயாகும். கைத்தொழிற் புரட்சியின் பலனாக 19-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியின் பின்னர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் விரைவான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அந்த நிலையே பிற்காலத்திலும் நீடிக்கும் (பொருளாதாரம் மொத்த ரீதியில் வளர்ச்சியடைந்து செல்லும். முழுமையான ரீதியில் எவ்வித பிரச்சினையும் ஏற்படமாட்டாது) என்று பழம்பொருளியலாளர்கள் கருதியமையால் தனிப்பட்ட நிறுவனத்தின் உற்பத்தியை எவ்வாறு பெருக்கலாம், தனிப்பட்ட முயற்சியாளர் எவ்வாருன முறையில் லாபத்தினை உச்சப்படுத்தலாம் என்ற வகையிலேயே அவர்களது சிந்தனை சென்றுகொண்டிருந்தது. அதாவது ஒரு சில தனிப்பட்ட விடயங்களை உதாரணமாக வைத்தே பொருளாதார முழுமைக்கும் பரிகாரம் தேட முயன்றனர். 1930-ம் ஆண்டளவில் பொருளாதார முழுவதிலும் உலகளாவிய பாரிய வேலையின்மை ஏற்பட்ட போது அவர்கள் கையாண்ட சிற்றினரீதியான ஆய்வு முறை அப்பாரியளவு வேலையின்மையை நீக்குவதற்குரிய வழிமுறைகளைக் காட்டாதபடியால் விழித்துக்கொள்ளவேண்டிய நிலைக்குள்ளாயினர். இந்நிலையிலேயே கெயின்சினுல் மொத்த ரீதியாகப் பொருளாதாரத்தினை நோக்கும்முறை தெளிவான ரீதியில் பொதுக்கொள்கையில் காட்டப்பட்டது. பேரின ரீதியான நோக்கினுல் தெளிவான முறையில் முதன் முதலில் பொருளாதாரக் கருத்துக்களை பொதுக்கொள்கை விளக்கியமையாலும் அந்த நோக்கிலேயே மந்தத்தினை நீக்குவதற்குரிய வழிவகைகளைக் காட்டியமையாலும் பொருளியல் உலகில் அந்நூல் முக்கியத்துவம் பெறுகின்றது.

பழம் பொருளியலாளர்கள் பல காலமாகக் கையாண்டுவந்த உண்மைத்தன்மையற்ற (Unrealistic) எடுகோளான நிறைவு வேலைமட்டம் என்பதனைத் தகர்த்தெறிந்த பெருமை பொதுக்கொள்கையையே சாரும். பழம் பொருளியலாளரின் கருத்துக் கட்டடங்கள் பல, நிறைவு வேலைமட்டம் என்ற எடுகோளினை அத்திவாரமாக வைத்தே எழுப்பப்பட்டிருந்தன. பழம்பொருளியலாளர்கள் ஒரு பொருளாதாரத்தில் எப்போதும் நிறைவு வேலைமட்டம் இருக்குமெனவும், அதில் ஏதும் குறைவுகள் ஏற்படின் தன்னியக்க முறையிலேயே அது விரைவில் நீக்கப்பட்டுவிடும் என்றும் கருதி இருந்தனர். இவர்களின் கருத்துப்படி பொருளாதாரத்தில் விருப்பமின்றி வேலை செய்யாமல் இருத்தல் என்பது தற்காலிகமான நிகழ்ச்சியே. விருப்பத்துடன் வேலையில்லாமல் இருக்கலாம் என்பதையும் உராய்வு வேலையின்மை என்பதையும் ஏற்றுக்கொண்டிருந்தனர். பிரபுக்கள், ஜமின்தரர்கள் போன்ற பெரிய தனவந்தர்கள் தம்மிடம் உள்ள சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தினைக் கொண்டே சீவிக்க முடியும். உழைத்து அதன்மூலம் வரும் வருமானத்தினைக்கொண்டு

தான் சீவிக்கவேண்டும் என்ற அவசியம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் விரும்பினுல் வேலை செய்யாமல் இருக்கலாம். அவ்வாறு வேலை செய்யாமல் இருப்பவர்களை விருப்பத்துடனுன வேலையின்மை என்பதற்குள் அடக்கப்படுவர், வேலை செய்ய விருப்பமிருந்தும் வேலை கிடைக்காத நிலையே விருப்பமின்றி வேலையின்மை என்பதன் கருத்து. இத்தகைய நிலை பொருளாதாரத்தில் தற்காலிக நிகழ்ச்சியாக இருக்குமேயன்றி தொடர்ச்சியான நிலைமையாக இருக்காது என்பது பழம்பொருளியலாளர் கருத்து. பழம்பொருளியலாளர் இவ்வாறு கருதி இருந்தமைக்குக் காரணம் அக்காலத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொண்டிருந்த ''நிரம்பல் எப்போதும் தனக்குரிய கேள்வியினைத் தானே ஏற்படுத்திக் கொள்கிறது.'' (Supply always creates its own demand) என்ற விதியேயாகும், இதனை ஜே. பி. சே. (J. B. Say) என்பவர் கூறியபடியால் சேயின் விதி என்றும், இது சந்தை சக்திகளான கேள்வி, நிரம்பல் என்பவற்றைப் பற்றிக் கூறுவதால் சேயின் சந்தை விதி (Say's market law என்றும் அழைப்பர். இவ்விதியின்படி உற்பத்தி நிகழும்போதே அதற்கான கேள்வியும் உருவாகின்றது. எனவே பொருள் தேக்கம் அல்லது மிகை உற்பத்தி என்பது ஏற்படாது. உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் அனைத்தும் விற்கப்படும். இதனுல் மீண்டும் மீண்டும் பொருட்கள் உற்பத்தி செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட அதில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கும் வேலை கிடைத்துக்கொண்டே இருக்கும். இதன் பலனுக வேலை இன்மை என்பது ஏற்படாது என்பதே பழம்பொருளியலாளரின் கருத்து. இன்னும் விரிவாகக் கூறின் பொருட்களுக்கான கேள்வியானது உற்பத்திக்காரணிகளின் வருமானத்தினுல் தோற்றுவிக்கப்படுகிறது. உற்பத்திக் காரணிகள் சேவையில் ஈடுபடும்போது வருமானத்தினைப் பெற்றுக்கொள்கின்றன. அதே நிலையிலேயே அதாவது சேவையில் ஈடுபடும்போதே உற்பத்திக் காரணிகள் பொருட்களை உற்பத்தி — நிரம்பல் — செய்கின்றன. அவ்வுற்பத்தி தனக்குரிய கேள்வியினை உருவாக்கிக் கொள்வதால் வருமானம் முழுவதும் உற்பத்திப் பொருட்களின்மீது செலவழிக்கப்படுகின்றது. வருமானம் முழுவதும் மக்களால் செலவழிக்கப்படுகின்றது என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டதே சேயின் விதியாகும். ஆனுல் உண்மையில் மக்கள் தம் வருமானம் முழுவதையும் செலவழிப்பதில்லை. அதில் ஒரு பகுதியினைச் சேமிக்கிறுர்கள் என்பது நாம் கண்கூடாகக் காணும் விடயமாகும். சேமிப்புக்குள்ளான வருமானத்தின் ஒரு பகுதி பொருட்களை வாங்கப் பயன்படுவதில்லையாதலால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் ஒரு பகுதி தேங்கிக் கிடக்கும். அதாவது, மிகை உற்பத்தி ஏற்பட்டிருக்கும். இதன் விளைவாக வேலை இன்மை என்பது ஏற்படும். பழம்பொருளியலாளர்கள் கருதியபடி நிறைதொழில் மட்டம் என்பது பொருளாதாரத்தில் எப்போதும்நிலவமாட்டாது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இருந்து வேலை இன்மை என்னும் நோயினைத் தீர்ப்பது சுலபமான காரியமல்ல; அந்நோய் அடிக்கடி முதலாளித்துவ பொருளாதாரத்தினைப் பாதித்தேதீரும் என்பதைக் கெயின்ஸ் பொதுக்கொள்கையில் விளக்கி உள்ளார். சேயின் விதியினைக் காரணங்காட்டி மறுத்துக் கூறியதன்மூலம் நிறை தொழில் மட்டம் என்று பழம்பொருளியலாளரால் கருதப்பட்டு வந்த யதார்த்தத் தன்மையற்ற எடுகோளைப் பொருளியல் உலகிற்கு எடுத்துக்காட்டி பொதுக்கொள்கையானது முக்கியத்துவத்தினைப் பெற்றுக் கொள்கிறது.

பழம்பொருளியலாளரது கருத்துக்களில் பணநிரம்பல், பணக்கேள்வி போன்ற பணச்சார்பான (Monetary) கருத்துகளுக்கும், வேலை வாய்ப்பு, வெளியீடு போன்ற மெய் சார்பான (Real) கருத்துக்களுக்கும் இடையே எவ்வித தொடர்புமற்று பிளவு பட்ட தன்மை காணப்பட்டது. பொருளாதாரத்தில் மந்த நிலைகள், செழிப்பு நிலைகள் ஏன் ஏற்படுகின்றன? வேலை மட்டத்தில் ஏன் ஏற்ற இறக்கங்கள் ஏற்படு

கின்றன? வட்டி வீதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றது? என்பன போன்ற வினாக்களுக்கு பணரீதியான காரணிகளுடன் தொடர்புறாமல் மெய் ரீதியான காரணிகளைக் கொண்டே பழம்பொருளியலாளர்கள் விளக்கமளித்திருந்தனர். பழம் பொருளியலாளர் தம் கருத்துக்களில் பணம், பொருளாதாரத்தில் ஆற்றுகின்ற சேவைகளுக்குரிய முக்கியத்துவத்தினை அளித்திருக்கவில்லை. பணமானது பொருட்கள் சேவைகளின் கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக்குவதற்கு உதவுகின்ற பண்டமாற்றூடகமாக மட்டுமே சேவை செய்கின்றது என்றே கருதி இருந்தனர். திரவத் தேர்வுக் கோட்பாட்டினை (Liquidity Preference Theory) அடிப்படையாக வைத்து பணம் ஒரு பண்டமாற்றூடகமாக மட்டுமல்ல, சொத்தாகவும் தொழிற்படுகின்றது என்பதனை, விளக்கி, வட்டி வீதத்தினூடாக இரண்டு கொள்கைகளையும் கெயின்ஸ் இணைத்துக் காட்டினார். பின்வரும் வகையில் அவரது விளக்கம் அமைகின்றது. வேலை மட்டத்தின் அளவினை நிர்ணயிப்பதில் மொத்த முதலீடானது முக்கியத்துவம் பெறுகின்றது. முதலீட்டினை நிர்ணயிப்பதில் முதலின் எல்லை விளைதிறனும் வட்டி வீதமும் பங்கு பெறுகின்றன. கெயின்சின் கருத்துப்படி வட்டி வீதமானது பணத்தின் நிரம்பலினாலும் பணத்தின் கேள்வியினாலும் நிர்ணயிக்கப்படுகின்ற முற்றிலும் பணச்சார்புடைய கருத்தாக அமைகின்றது. எனவே பணநிரம்பலின் அளவினையோ பணக்கேள்வியின் அளவினையோ மாற்றுவதனூடாக வட்டி வீதத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தலாம். வட்டி வீதத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டில் மாற்றத்தினை ஏற்படுத்தி வேலைமட்டம், வெளியீடு என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். இதன்மூலமாக நாணய நடைமுறைக் கொள்கை (Monetary Policy) யின் முக்கியத்துவத்தினையும் விளக்குகிறார். இக்காலப் பொருளாதாரம் பணப் பொருளாதாரம். மனிதன் அடைந்துள்ள மகத்தான வளர்ச்சிக்குப் பணம் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. உதாரணத்திற்காக பணம் என்ற கருவியினை நடைமுறை உலகில் இருந்து நீக்கிவிட்டு அதனால் எழக்கூடிய விளைவுகளை நினைத்துப் பார்த்தோமானால் பல சிக்கல்கள் எழக் கூடும் என்பதையும், பொருளாதார இயக்கமே நின்றுவிடக்கூடும் என்பதையும் உணரலாம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பணத்தின் பங்கினை வெளிப்படுத்திக் காட்டி, பணச்சார்பான கருத்துக்களையும் மெய்சார்பான கருத்துக்களையும் தனித்தனியே நோக்கிய அறிவுக்குறைவான நோக்கினைவிட, அறிவொளிபொருந்திய முறையில் இரண்டையும் இணைத்து நோக்கிய பெருமை பொதுக்கொள்கையையே சாரும்.

தலையிடாக் கொள்கை என்பது ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளில் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. இதன்படி அரசாங்கமானது பாதுகாப்புச் சேவைகள், சமூக சேவைகள் போன்றவற்றில் மட்டுமே ஈடுபடலாமேயொழிய தனியார்துறைப் பொருளாதார நடவடிக்கைகளில் அதிகளவு தலையீட்டினைச் செய்ய முடியாத நிலையில் இருந்தது. அதாவது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தலையிடாக் கொள்கையின் செல்வாக்கினால் ஒடுக்கப்பட்டவையாக இருந்தன. மொத்த வேலை மட்டத்தின் அளவினை நிர்ணயிக்கின்ற பயன்படு கேள்வியினை நிர்வகிப்பதற்கு அரசாங்கத்தின் தலையீடு அத்தியாவசியமெனக்கூறி, அரசாங்கத்தின் தலையீடின்றி எந்த ஒரு பொருளாதாரத்திலும் நிறைதொழில் மட்டத்தினை அடைய முடியாதென்பதை பொதுக்கொள்கையில் தெளிவுபடுத்தி, தலையிடாக் கொள்கையின் செல்வாக்கினை கெயின்ஸ் குறைத்தார்.

கெயின்சின் கருத்துப்படி ஒரு நாட்டின் வேலை மட்டத்தின் அளவானது பயன்படுகேள்வியின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றது. பயன்படுகேள்வி என்பது மொத்த கேள்வித் தொழிற்பாட்டு வளைகோடும் (Aggregate Demand Function

Curve) மொத்த நிரம்பல் தொழிற்பாட்டு வளைகோடும் சந்திக்குமிடத்திலே உள்ள புள்ளியாகும். ''முயற்சியாளர்கள் வெவ்வேறுபட்ட வேலைமட்டங்களில் இருந்து கிடைக்கின்ற வெளியீட்டின் விற்பனையில் இருந்து எதிர்பார்க்கின்ற வெவ்வேறுபட்ட பண வருவாய்களின் அளவுகளைத் தருகின்ற தொழிற்பாடாக அல்லது பட்டியலாகவே'' மொத்தக் கேள்வித் தொழிற்பாடென்பது அமைகின்றது. ''முயற்சியாளர்கள் வெவ்வேறுபட்ட வேலை மட்டங்களில் கிடைக்கின்ற வெளியீட்டின் இரு விற்பனையில் இருந்து கட்டாயமாகப் பெறவேண்டிய வெவ்வேறுபட்ட பண வருவாய்களின் அளவுகளைத் தருகின்ற தொழிற்பாடாக அல்லது பட்டியலாகவே'' மொத்த நிரம்பல் தொழிற்பாடு என்பது விளங்குகின்றது. அவ்விரு வளைகோடுகளும் சந்திக்குமிடத்திலேயே வேலை மட்டமானது தீர்மானிக்கப்படும் என்பது கெயின்சின் கருத்து. இச்சமநிலையில் நாட்டில் உள்ள மொத்த உழைப்பினரும் வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதாவது நிறை தொழில் மட்டமாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. சிலர் வேலை இல்லாமலும் இருக்கலாம். பயன்படு கேள்வியின் அளவானது உண்மையாக இருக்கவேண்டிய அளவிலும் பார்க்கக் குறைவாக இருக்கின்றது என்பதே அதன் கருத்தாகும். அந்நிலையில் உள்ள சமநிலையானது கீழுழைப்பு சமநிலை (Under - Employment Equilibrium) என்று அழைக்கப்படும். பழம்பொருளியலாளரின் கருத்துப்படி பொருளாதாரத்தில் நிறை தொழில் மட்டம் என்பது எப்போதும் நிலவும். ஆனால் கெயின்சின் கருத்துப்படி நிறை தொழில் மட்டம் நிலவலாம்; ஆனால் அது ஏற்படுவது அரிது. குறுங்காலத்தில் மட்டுமல்ல நீண்டகாலத்திலும் கீழுழைப்பு சமநிலை என்பதே பெரிதும் நிலவும். நிறைதொழில்மட்டம் நிலவும்போதும் கீழுழைப்பு சமநிலை நிலவும்போதும் கெயின்சின் கருத்துக்கள் இரண்டு நிலைமைகளுக்கும் பொதுவானதாக அமைகின்றமை பொதுக்கொள்கை என்ற நூலின் பெயருக்கும் வலுவைக் கொடுப்பதாக அமைகின்றன. கீழுழைப்பு சமநிலை என்ற விடயத்தினை தெளிவு படுத்தியமையாலும் பொதுக்கொள்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

மொத்த வேலைமட்டத்தின் அளவினைத் தீர்மானிக்கின்ற பயன்படு கேள்வியின் ஒரு பகுதியான மொத்தக் கேள்வித் தொழிற்பாட்டில் நுகர்வு, முதலீடு என்ற இரு பகுதிகள் உள்ளன. மேலும் அவற்றினை தனியார் நுகர்வு, அரசாங்க நுகர்வு அரசாங்க முதலீடு, தனியார் முதலீடு என்ற பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். மொத்த வேலைமட்டத்தினை நிர்ணயிப்பதில் மொத்தக் கேள்வித் தொழிற்பாடானது முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே மொத்த வேலை மட்டத்தினை நிர்ணயிப்பதில் நுகர்வு, முதலீடு என்பவை முக்கியம் பெறுகின்றன எனக் கூறிக்கொள்ளலாம். இதில் நுகர்வு என்பது அதிகம் மாற்றம் அடையாது, பெரும்பாலும் நிலையான தன்மை உடையது. வேலைமட்ட நிர்ணயிப்பில் நுகர்வின் தாக்கத்தினைவிட முதலீட்டின் தாக்கத்தினையே கெயின்ஸ் முக்கியத்துவமுடைய தொன்றாகக் கருதினார். தனியார் முதலீடானது அகக்காரணங்களாலும், புறக்காரணங்களாலும் மாற்றமடையக்கூடியது. தனியார் முதலீட்டில் குறைவு ஏற்படுமாயின் அக்குறையினை நீக்குமுகமாக அரசாங்கம் தானாகவே செலவுகளைச் செய்யவேண்டும் என்று கூறி நிதிக் கொள்கையின் முக்கியத்துவத்தினையும் வேலைமட்டத்தினை நிர்ணயிப்பதில் முதலீடு பெறுகின்ற முதன்மையையும் விளக்குகின்றார். இதன் மூலமாக அரசாங்கத்திற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இருக்கவேண்டிய தொடர்பும் தெளிவாக்கப்படுகிறது. அத்துடன் வேலை இன்மையை நீக்குவதற்குரிய வழியானது பழம் பொருளியலாளர் கருதியபடி கூலிக்குறைப்பு அல்ல; மொத்தக் கேள்வியினைச் சரியான வகையில் நிருவகித்துக் கொள்வதே என்பதும் விளக்கப்படுகிறது.

பழம்பொருளியலாளர்கள் நாட்டில் வேலையின்மை நிலவும்போது அதனைக் குறைப்பதற்கு கூலிக் குறைப்பினைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினர். பிகு என்ற பொருளியலறிஞர் கூலிக் குறைப்புக்கும், வேலை மட்டத்திற்கும் உள்ள தொடர்பினை 'கூலிகள் ஓர் உற்பத்திச் செலவு' என்ற வகையில் பின்வருமாறு விளக்குகிறார். கூலிகளைக் குறைப்பின் உற்பத்திச் செலவு குறையும். உற்பத்திச் செலவுக் குறைவு பொருட்களின் விலையைக் குறைக்கும். பொருட்களின் விலைக் குறைப்பு நேரடியாக பொருட்களின் கேள்வியினை அதிகரிக்கும். இந்நிலைமை பொருட்களை அதிகம் உற்பத்தி செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்த அதிக தொழிலாளர் வேலைக்கமர்த்தப்படுவர். இதனால் வேலையின்மை நீங்கும். பிகு இவ்வாறான விளக்கத்தினைக் கொடுத்தபோது தொழில் முயல்வோருக்கு (Entrepreneurs) செலவாக அமைகின்ற கூலியானது தொழிலாளர்களுக்கு வருமானமாயும் அவ்வருமானமே உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியை ஏற்படுத்தக் காரணமாகவும் அமைகின்றது என்பதை மறந்து விட்டார். கூலிக்குறைப்பானது தொழிலாளர்களின் கொள்வனவுச் சக்தியைக் குறைத்து மொத்தக் கேள்வியின் அளவினைக் குறைக்கும் என்பதை உணரவில்லை. மொத்தக் கேள்விக் குறைவானது மொத்த வேலை மட்டத்தினைக் குறைக்கும். சில வேளைகளில் மற்றவை மாறாத இடத்து மொத்த விலைக்குறைவு வீதாசாரமானது. மொத்தக் கூலிக்குறைப்பு வீதாசாரத்திலும் பார்க்கக் கூடுதலாக இருப்பின் பிகு எதிர்பார்த்த விளைவு ஏற்படலாம். ஆனால் நடைமுறையில் கூலிக் குறைப்பு என்பது இலகுவான காரியமல்ல. காரணம் தொழிலாளர்களின் நிரம்பல் பழம்பொருளியலாளர்கள் கருதியபடி மெய்க்கூலியின் தொழிற்பாடல்ல. பணக்கூலியின் தொழிற்பாடே என்று கெயின்ஸ் கூறுகிறார். அத்துடன் தொழிலாளர்கள் பணத்தின் பொய்த்தோற்றம் (Money Illusion) என்பதற்குள்ளாவதும் கூலிகளானவை நெகிழ்ச்சியற்றவையாக இருப்பதுவும் கூலிக் குறைப்பினைச் செய்வதற்குத் தடையாக உள்ளன. மெய்க்கூலி (Real Wage)யை விட பணக்கூலி (Money Wage) யிலேயே தொழிலாளர்கள் பெரிதும் அக்கறை கொண்டுள்ளதால், பணக்கூலியில் ஏற்படுத்தும் குறைப்பானது வேலை நிறுத்தங்களுக்கும் வேறும் பல விரோதச்செயல்களுக்கும் தூண்டுகோலாக அமையும். எனவே கூலிக்குறைப்பு என்பது தர்க்கரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும், வேலையின்மையைக் குறைக்கச் செய்கின்ற ஒரு காரணி அல்ல என்பதை விளக்கி பயன்படு கேள்வியினைச் சரியாக நிருவகிப்பதன் மூலமே வேலையின்மையை நீக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தமையினாலும் பொதுக்கொள்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

திரவத் தேர்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் கெயின்ஸ் வட்டிவீத நிர்ணயிப்புப் பற்றிப் புதியதொரு கருத்தினை பொருளியல் உலகிற்கு வழங்கினார். "திரவத்தன்மையினை விட்டுக் கொடுப்பதற்காக மக்களுக்கு வழங்கப்படும் வெகுமதியே வட்டி" (Interest is the reward for parting with liquidity) என்பது கெயின்சின் கருத்து. இதற்கு முன்னர் பழம்பொருளியலாளரால் முதலீடு, சேமிப்பு என்ற மெய்க் காரணிகளாலேயே வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகிறது என்று விளக்கப்பட்டிருந்தது. பணக்காரணிகளுக்கு எவ்வித இடமும் கொடுக்கப்பட்டிராததால் அது மெய்ச்சார்பான வட்டிக் கொள்கை என்று அழைக்கப்பட்டது. ஆனால் கெயின்ஸ் தனியே பணநிரம்பலையும் பணத்தின் கேள்வியினையும் கொண்டு வட்டிவீத நிர்ணயிப்பினை விளக்கியமையால் அது பணச்சார்பான வட்டிக் கொள்கை என்று அழைக்கப்படுகிறது. பணநிரம்பலை கொடுக்கப்பட்ட அளவாக எடுத்துக்கொண்டு பணத்தின் கேள்விப்பக்கத்தினையே விரிவாக ஆராய்கிறார். கெயின்சின் கருத்துப்படி பணத்திற்கான கேள்வியானது மூன்று வகைப்படும்,

(1) கொடுக்கல் வாங்கல்களுக்கான பணத்திற்கான கேள்வி.

(2) முன்னெச்சரிக்கை நோக்கம் பொறுத்த பணத்திற்கான கேள்வி.

(3) உத்தேச நோக்கம் பொறுத்த பணத்திற்கான கேள்வி.

முதலிரண்டும் பணம் ஒரு பண்ட மாற்றூடகம் என்ற அடிப்படையில் இருந்து எழுவனவாகவும் வருமானத்தின் தொழிற்பாடாகவும் அமைகின்றன. மூன்றாவது வகையான கேள்வி பணம் ஒரு சொத்து என்ற அடிப்படையில் இருந்து எழுவதாகவும், வட்டி வீதத்தின் தொழிற்பாடாகவும் அமைகின்றது. வட்டிவீத மாறுதலுக்கும் ஆவணங்களின் பெறுமதிக்கும் உள்ள நடைமுறை உண்மைகளை வைத்தே உத்தேச நோக்கக் கேள்வி விளக்கப்பட்டுள்ளது. உத்தேச நோக்கக் கேள்வியினை முக்கிய கருவியாக வைத்தே வட்டிவீத நிர்ணயிப்புப் பற்றி புதிய விளக்கத்தினை கெயின்ஸ் அளித்தார். பேராசிரியர் கான்சன் (Hansen) போன்றோர் கெயின்சின் வட்டிவீத நிர்ணயிப்புப் பற்றிய கருத்தில் பூரண திருப்தியடையாவிடினும் அவர் கூறுகின்ற கருத்துக்கள் உண்மை நிலைக்கு அண்மையில் சென்றுள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள். கெயின்சின் வட்டிக்கொள்கையும் வட்டிவீத நிர்ணயிப்புப் பற்றிப் பூரணமான விளக்கத்தினைக் கொடுக்கவில்லை எனினும் இன்று வட்டிவீத நிர்ணயிப்புப் பற்றி விளக்க எழுகின்ற எந்தக் கொள்கையும் பூரணத்துவம் பெறவேண்டுமாயின் பணக்காரணிகளையும் சேர்த்த கொள்கையாக இருக்கவேண்டும். இல்லையாயின் அக்கொள்கை முழுமைபெற முடியாது. இவ்வகையில் நோக்கும்போது வட்டிவீத நிர்ணயிப்பு பற்றிய விளக்கத்திற்கு பணச் சார்பான கருத்தினை முதன் முதலில் கொடுத்ததென்ற வகையில் பொதுக்கொள்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

கெயின்சினால் பொதுக்கொள்கை மூலம் வெளியிடப்பட்ட புதிய கருத்துக்களில் நுகர்வுத் தொழிற்பாடும் ஒன்றாகும். மக்களின் வருமானத்தினையும் நுகர்வினையும் தொடர்பு படுத்தியே நுகர்வு நாட்டம் என்ற விடயத்தினை விளக்கி உள்ளார். குறுங்காலத்தினைப் பொறுத்தவரையில் நுகர்வுத் தொழிற்பாடானது நிலையானது; அடிக்கடி மாறும் தன்மையுடையதல்ல என்று கெயின்ஸ் விளக்கியமை பலநாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ''வருமானம் அதிகரிக்கின்றபோது மக்கள் அதிகரித்த வருமானம் முழுவதையும் செலவழிப்பதில்லை. அதில் ஒரு பகுதியைச் சேமிக்கின்றார்கள்'' என்ற உளவிதியினைக் கூறியதன் மூலம் பல விடயங்களைத் தெளிவுபடுத்தி உள்ளார். சேயின் சந்தைவிதியின் போலித் தன்மையை வெளிப்படுத்த இந்த உளவிதியே உதவி செய்தது. வேலை மட்டத்தினை நிர்ணயிப்பதில் முக்கிய இடம் பெறுகின்ற மொத்தக் கேள்வித் தொழிற்பாட்டில் உள்ள நுகர்வு முதலீடு என்ற இருபகுதிகளில் பொதுவாக நுகர்வு மொத்த வருமானத்திற்குக் குறைவாக இருக்குமென உளவிதியின் மூலம் விளக்கி உயர்ந்த வேலை மட்டத்தினைப் பேணுவதில் முதலீட்டுக்குரிய முக்கியத்துவம் காட்டப்படுகிறது. வர்த்தக சகட ஓட்ட (Trade Cycle) நிலைகளில் பூரிப்பு நிலையின் உச்சகட்டம் மந்த நிலைக்கு வழி வகுப்பதையும், மந்த நிலையின் உச்ச இறக்கக் கட்டம் பூரிப்பு நிலைக்கு வழிவகுப்பதையும் நுகர்வுத் தொழிற்பாடு விளக்கியதன் மூலம் நுகர்வுத் தொழிற்பாடு என்ற விடயமும் பொதுக்கொள்கையும் பெருமை பெறுகின்றன.

பெருக்கி (Multiplier) கோட்பாடும் முதன் முதலில் தெளிவாக விளக்கப்பட்டது பொதுக்கொள்கையிலேயாகும் முதலில் கான் (Kahn) என்பவரால் பெருக்கி பற்றிய கருத்து தெரிவிக்கப்பட்டது. அவரது பெருக்கி 'வேலைப் பெருக்கி'' யாகும். கெயின்சினால் விளக்கப்பட்ட பெருக்கி ''முதலீட்டுப் பெருக்கி'' யாகும். ஆரம்பத்

தில் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் அதன் வழியாக மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குவதே முதலீட்டுப் பெருக்கியாகும். இன்று வேலைக்கொள்கை பற்றிய விளக்கத்தில் இருந்து பிரிக்க முடியாத ஒரு அம்சமாக பெருக்கிக்கோட்பாடு அமைந்துவிட்டது. வெளிநாட்டு வர்த்தகப் பெருக்கி, சமநிலைப் பாதீட்டுப் பெருக்கி போன்ற புதிய கோட்பாடுகள் வெளிவந்து பொருளியல் உலகினை விரிவடையச் செய்ய உதவியமையாலும் பெருக்கிக் கோட்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

எந்த ஒரு நாட்டினதும் பொருளாதாரம் நிலையானதாக இருப்பதில்லை. மாறுபட்டுக் கொண்டே செல்கின்ற இயக்கவியல் (Dynamic) தன்மையுடையதாக உள்ளது. காலாகாலம் மாறுபட்டுக் கொண்டு செல்கின்ற ஒரு விடயத்தினை விளக்க எழுகின்ற எக்கருத்தும் எதிர்கால, நிகழ்கால நிகழ்ச்சிகளை இணைத்துக் கூறத்தக்க வகையில் தெரிவிக்கப்பட்டிருப்பின் அவை சிறப்புத்தன்மையினைப் பெறும். இதனாலும் பொதுக்கொள்கை முக்கியத்தும் பெறுகின்றது. பழம் பொருளியலாளர் தமது கருத்துக்களை நிலையான தன்மையுடைய விளக்கங்கள் மூலமாக அளித்துள்ளனர். ஆனால் கெயின்ஸ் எதிர்கால நிசழ்வுகளில் நிகழ்கால நடவடிக்கைகளின் தாக்கங்களை இணைத்துக் கூறத்தக்க வகையில் இயக்கவியல் கருத்துக்களை பொருளியல் உலகிற்கு பொதுககொள்கைமூலம் தெரிவித்துள்ளார். நிகழ்காலத்தில் செய்யப்படும் முதலீடானது எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததொன்றாக அமையும். நிகழ்காலத்தில் முதலீட்டுத் தீர்மானத்தினை செய்கின்றபோது அதில் முயற்சியாளர்களின் எதிர்கால எதிர்பார்க்கை (Future expectation) என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. இது ஓர் அகப்பண்பாகும். இது முன்பு எவராலும் கூறப்படாத புதிய கருத்தாக பொதுக் கொள்கையில் காணப்படுகின்றது. முயற்சியாளர்கள் எதிர்கால லாப நோக்கினை மனதில் வைத்தே நிகழ்காலத்தில் முதலீடுசெய்வது பற்றிய தீர்மானத்தினை எடுக்கின்றார்கள். இத்தகைய எதிர்கால எதிர்பார்க்கையானது முதலீட்டுத் தொழிற்பாட்டில் இடம்பெறுவதால் அது நுகர்வுத் தொழிற்பாட்டினை விட சிக்கலானதொரு விடயமாக அமைகின்றது என்று சில பொருளியலறிஞர்களால் வருணிக்கப்படுகின்றது. முதன்முதலில் கெயின்சினால் இயக்கவியல் தன்மையுடைய கருத்துக்கள் கூறப்பட்டு அதனைப்பின்பற்றி தற்காலத்தில் பல்வேறு அறிஞர்களும் இயக்கவியல் தன்மையுடைய கருத்துக்களை பொருளியல் உலகிற்கு வழங்குவதற்கு மூலகாரணமாக அமைந்ததனால் பொதுக்கொள்கை முக்கியத்துவம் \பெறுகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களைவிட விக்க இடைவெளி, சுருக்க இடைவெளி, குறைநிலைவரவு - செலவுத்திட்டத்தின் முக்கியத்துவம் தற்கால அரசாங்கங்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்றான நிறைதொழில் மட்டக்கொள்கை, மற்றும் நாணய நடைமுறைக் கொள்கை, நிதிநடைமுறைக் கொள்கை ஆகியவற்றின் முக்கியத்துவம் போன்ற இன்னோரன்ன விடயங்களை விளக்கியமையாலும் பொதுக்கொள்கை சிறப்புப் பெறுகின்றது.

பொதுக்கொள்கை வெளிவந்து நாற்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. அதில் கூறப்பட்ட கருத்துக்கள் பலவற்றிற்கு அக்காலத்தில் கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்துவம் தற்போது குறைந்துவிட்டது. பல கருத்துக்கள் கண்டனங்களுக்கும் மறுப்புக்களுக்கும் உள்ளாகி உள்ளன. சமூக விஞ்ஞானக் கருத்துக்கள் எக்காலத்திலும் ஒரேயளவு முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்க முடியாது. காலமாறுதல்

களுக்கேற்ப சமூகங்களின் பொருளியல், அரசியல் நிலைமைகள் மாறும்போது சில கருத்துக்கள் செல்வாக்குப் பெறுவதும் சில கருத்துக்கள் செல்வாக்கு இழப்பதும் இயல்பே. இதற்கு பொதுக்கொள்கையும் விதிவிலக்கானதல்ல. எனினும் அமெரிக்கப் பொருளியலறிஞரான சாமுவேல்சன் (Samuelson) கூறுவது போன்று பொதுக் கொள்கையானது பொருளியல்உலகில் நீண்ட காலத்திற்கு ஒரு பிரமாணமான நூலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## உசாத்துணை நூல்கள்


1. Ackley, **Macroeconomic Theory**, The Macmillan Company, New York, 1961

2. Dillard, **The Economics of John Maynard Keynes**, Crosby Lockwood and Son Ltd,. London, 1960.

3. Hansen, H. A., **Guide to Keynes**, McGraw - Hill Book Company, New York, 1953.

4. Keynes J. M., **The General Theory of Employment, Interest and Money** Macmillan and Co. Limited, London, 1936.

5. Mc Cracken L, **Keynesian Economics in the Stream of Economic Thought**, Louisiana State University Press. 1961.

6. Samuelson, **Economics**, McGraw - Hill Kogakusha Ltd. 1973.

7. Seth M. L., **An Introduction to Keynesian Economics**, Lakshmi Narain Agarwal, Agra - 3, 1967.

8. Vaish, M. C., **Macroeconomic Theory**, Vikas Publishing House PVT. Ltd, Delhi, 1974.